FWC

# வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
# Field Work Centre
# தவணைப் பரீட்சை, நவம்பர்- 2016
# Term Examination, November - 2016

| தரம் :- 13 (2017) | தமிழ் – I | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

அறிவுறுத்தல்கள் :-

**பகுதி I இல் உள்ள இரு வினாக்களுக்கும், பகுதி II இல் உள்ளவற்றுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கும் எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

## பகுதி - I

**01) மேலுள்ள செய்யுள்களை வாசித்து அவற்றின் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.**

*1)* நல்லுரை யிகந்து புல்லுரை தாஅய்ப்
பெயனீர்க் கேற்ற பசுங்கலம் போல
உள்ளந் தாங்கா வெள்ள நீந்தி
அரிதவா வுற்றனை நெஞ்சே நன்றும்
பெரிதா லம்மநின் பூச லுயர் கோட்டு
மகவுடை மந்தி போல
அகனுறத் தழீஇக் கேட்குநர்ப் பெறினே

அ) இச்செய்யுள் எத்துறையில் அமைந்துள்ளது என்பதை விளக்குக.

ஆ) தனது உள்ளத்தின் தவிப்பைத் தலைவன் வெளிப்படுத்துமாற்றினை விளக்குக.

இ) இச்செய்யுளிற் கையாளப்பட்டுள்ள உவமைகளை எடுத்துக்காட்டி விளக்குக.

ஈ) இச்செய்யுள் மூலம் விளங்கும் அகத்திணை இலக்கிய மரபுகளை எடுத்துக் காட்டுக.

*2)* மூவ ராய்முத லாகி மூலம்
தாகி ஞாலமு மாகுமத்
தேவ தேவர் பிடித்த போர்வி
லொடித்த சேவகர் சேணிலம்
காவன் மாமுடி சூடு பேரெழில்
காண லாமெனு மாசைகூர்
பாவை மார்முக மென்ன முன்ன
மலர்ந்த பங்கய ராசியே

அ) இச்செய்யுள் இடம்பெறும் சந்தர்ப்பத்தினை விளக்குக.

ஆ) இச்செய்யுளின் பொருளை இக்கால உரைநடையில் எழுதுக.

இ) இச்செய்யுளில் இடம்பெறும் சிறப்பை விளக்குக.

ஈ) இராமனின் வீரம் எவ்வாறு புலப்படுத்தப்படுகின்றதென்பதை எடுத்துக் காட்டுக.

(24 புள்ளிகள்)

02) ‘அ’ பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

**அல்லது**

‘ஆ’ பகுதியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

அ) அருளின் முதலோன், அன்புடையோன்!
அகிலம் புரக்கும் எங்கோமான்
திருவார் மாந்தர் திருநாவில்
தேனாம் இனிய மொழி வைத்தோன்
உரவோன், அன்னான் திருநாமம்
உன்னி இதனை ஓதுகி றேன்

செய்ய கருணைச் செழுஞ் சோதீ
சிந்தை நீறி உழல் வாரும்
உய்ய அருளும் உள்நொந்தார்
உருக அருளும் ஒருகுரலில்
வையம் கொள்மா பேரரசும்
வழுத்தி இரக்கும் ஒரு சீமான்
ஐய கருணை யங்கடலில்
ஆடா தானின் பாடென்னே?

தன்னில் தானாம் நிலையுடையான்
தனியோர் ஆட்சி வலியுடையான்
தன்னை உணர்வார் அருகமைவான்
தனக்கே உரியார் துயர்களைவான்
அன்னோன் ஆற்றல் ஆழத்தை
அளந்தார் யாரே அளப்பாரே
ஒன்று மற்ற தொன்றாலே
உலகைச் செய்தான் என்னிறையே

திரையின் பின்னால் நோக்குகிறான்
தீங்கின் பாலே திளைப்பார்க்குத்
துரும்பைக் கொண்டே பெருந்துன்பம்
தொடரச் செய்யும் மாவல்லோன்
இருமை உலகும் அவனறிவில்
இரண்டு துளிகள் எனலாமே
அருமை இறைவன் புகழங்கி
அறிவாம் கைக்கு வசமாமோ?

1) இக்கவிதையூடாகப் புலவர் வெளிப்படுத்த விழைந்த விடயத்தைச் சுருக்கமாக விளக்குக.
2) தான் வெளிப்படுத்த விழைந்த விடயத்தை விளக்குவதற்குக் கவிஞர் கையாண்ட உத்திகள் பற்றிக் கருத்துரை வழங்குக.
3) இறைவனின் இயல்புகளையும் சிறப்புக்களையும் கவிஞர் எவ்வாறு சித்திரிக்கின்றார்?
4) கவிதை வெளிப்பாட்டு முறையிலுள்ள சிறப்புக்களை மதிப்பிடுக.

(16 புள்ளிகள்)

**அல்லது**

ஆ) ஆற்றல் நிறைந்த செஞ்சொற் புலவர்களால் அமைக்கப்பட்ட பாடல்களுக்கு உயிர் உண்டு. வலிமையுண்டு. பிரான்சு தேசத்துக்குப் புத்துயிரளித்துச் சமத்துவம் சகோதரத்துவத்தோடு கூடிய சுயராச்சியத்தைப் பெறச் செய்தது. ஓர் இன்னிசைக் கவிதையன்றோ? இமயம் முதற் குமரியீறாகக் கிடந்த வளம் நிறைந்த நம் தாய்நாட்டின் மீது அனைவருக்கும் அன்புண்டாகச் செய்து ஒன்று கூட்டி வைத்தது வங்கமொழிக் கவிவாணர் ஒருவர் பாடிய 'வந்தே மாதரம்' என்னும் பாட்டன்றோ? உயிரற்றுக் கிடக்கும் வெற்றெலும்புக்கு உயிரளிக்குமாற்றல் பாட்டுக்கு உள்ளதாதலின் உத்தம கவிகளின் பாடல் நாட்டுக்குப் பெரு நலத்தையளிக்கும் நீர்மையவாம்.

இரண்டு கோடி தமிழ் மக்களுக்கும் புத்துயிரையும் புதிய ஆற்றலையும் தந்து உலகத்திலுள்ள ஏனைய மக்கட் தொகுதியினரோடு ஒப்புற விருத்தி உயர்வினையளிக்கும் நீர்மையவாகிய சங்கச் செய்யுள்கள் தொன்மையவாதலின் கற்றோருக்கு அன்றி மற்றோர்க்குப் பயன்படாவாயின. சங்கச் செய்யுட்களுள்ளே செறிந்து கிடக்கும் காதலின்பத்தையும் வீரமேம்பாட்டையும் யாவரும் எளிதில் உணர்ந்து கொள்ளற் பொருட்டு இலகுவான நடையில் அமைந்த இன்னிசைத் தமிழ் பாடல்களாற் சொல்லவல்ல கவிவாணர் தமிழ் நாட்டுக்குப் பேருபகாரிகளாவர். இத்தகைய கவிவாணருள் முதல் வைத்து எண்ணப்படும் தகைமை சான்றவர் ஸ்ரீமான் சுப்பிரமணிய பாரதியார். தமிழ்நாடு செய்த தவப்பயனாய் உதித்த பாரதியார் தமது இன்னிசைப் பாடல்களினால் தமிழ் நாட்டுக்கும் தமிழ்மொழிக்கும் அளத்தற்கரிய பேருபகாரத்தைச் செய்திருக்கின்றார்.

1) செஞ்சொற் கவிவாணர் இயற்றும் கவிதையின் தன்மை பற்றிய கட்டுரை ஆசிரியரின் கருத்தை விளக்குக.
2) சங்கச் செய்யுளின் தன்மை பற்றியும் அதன் தற்காலப் பொருத்தப்பாடு பற்றியும் ஆசிரியர் கூறுவதைத் தெளிவுபடுத்துக.
3) பாரதியார் பற்றிய கட்டுரையாசிரியரின் மதிப்பீடு எத்தகையது?
4) ஆசிரியரின் மொழிநடை பற்றிக் கருத்துரை வழங்குக. *(16 புள்ளிகள்)*

## பகுதி - II

**03) வினைத்திட்பம் என்ற அதிகாரத்தை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

அ) வினைத்திட்பம் என்பதன் மூலம் வள்ளுவர் எதனைக் கருதினார்?
ஆ) வினைத்திட்பத்தின் அருமை, சிறப்பு, பயன் என்பன பற்றி வள்ளுவர் கூறியவற்றை விளக்குக.
இ) வினைத்திட்பம் இல்லாதோரின் இழிவு பற்றி யாது கூறப்படுகின்றது?
ஈ) இவ்வதிகாரத்தில் காணப்படும் உவமை அணிகளை எடுத்துக்காட்டி அவை கையாளப்பட்ட நோக்கங்களை விளக்குக. *(20 புள்ளிகள்)*

**04) கைகேயி சூழ்வினைப் படலத்தில் கைகேயி கேட்ட வரங்களைத் தசரத மன்னன் வழங்கியது முதல் காலைக்கதிரவனின் வருகை வரையுள்ள பகுதியை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.**

அ) தசரத மன்னனின் துன்பம்
ஆ) கைகேயியின் கொடிய குணங்களை விளக்க ஆசிரியரால் கையாளப்பட்ட தற்குறிப்பேற்ற அணிகள்
இ) காலையில் நிகழ்ந்த இயற்கை நிகழ்ச்சிகளுடன் கதை நிகழ்ச்சிகளைப் பொருத்திக் காட்டும் கம்பரின் கற்பனை ஆற்றல். *(20 புள்ளிகள்)*

**05) உமர்கய்யாம் பாடல்களை மொழிபெயர்த்த சு. து. சுப்பிரமணிய யோகியார், அப்துல் காதர் லெப்பை, கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை ஆகியோரது கவிதைகளிற் காணப்படும்.**

அ) ஒருமைப்பாடு

ஆ) வேறுபாடு

இ) உலக வாழ்வு நிலையாமை

ஈ) மொழி ஆளுகை

என்பன பற்றிக் கருத்துரைக்குக. *(20 புள்ளிகள்)*

**06) பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் 'விஞ்ஞானமும் அகராதியும்' என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.**

அ) 'விஞ்ஞானத்துறையிலும், அகராதித்துறையிலும் ஈழநாடே தமிழ்நாட்டுக்கு வழிகாட்டி' என்ற கூற்றின் பொருத்தப்பாடு

ஆ) டாக்டர் கிறீனும் அவரது மாணவர்களும் தமிழில் மருத்துவத்துறை வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகள்

இ) தமிழில் அகராதித்துறை வளர்ச்சிக்கு அமெரிக்க மிஷனறிமாரின் பங்களிப்பு

*(20 புள்ளிகள்)*

**07) 'வெறும் சோற்றுக்கே வந்தது' என்ற சிறுகதையில் இடம்பெறும்**

அ) வள்ளி

ஆ) வள்ளியின் தந்தை

இ) வள்ளியின் எஜமானி

ஆகிய பாத்திரங்களின் குணவியல்புகளை விளக்கி, அப்பாத்திரங்கள் கதை வளர்ச்சிக்கு உதவுமாற்றைத் துலக்குக. *(20 புள்ளிகள்)*

**08) மேல்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை விளக்குக.**

அ) 'மீண்டும் தொடங்கும் மிடுக்கு' என்ற கவிதையில் விவசாயியின் உணர்வுகள்

ஆ) 'விண்மீன்களுக்குத் திரும்ப ஏகுதல்' என்ற கட்டுரையில் டானிக்கனின் வாதத்துக்கும் புராண இலக்கியங்களுக்கும் இடையிலான தொடர்பு

இ) 'நீண்ட பயணம்' என்ற நாவலில் ஒடுக்கப்பட்ட மக்களின் எதிர்ப்புணர்வு

ஈ) 'சீபர்ப்பதம்' என்ற பதிகத்தில் சிவ பெருமானின் பெருமைகள்

*(20 புள்ளிகள்)*

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

# தவணைப் பரீட்சை, நவம்பர்- 2016

# Term Examination, November - 2016

FWC

| தரம் :- 13 (2017) | தமிழ் – II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள் :-**

- ❖ பகுதி I இல் உள்ள மூன்று வினாக்களையும், பகுதி II இன் 'அ' பிரிவிலிருந்து ஒரு வினாவையும் 'ஆ' பிரிவிலிருந்து ஒரு வினாவையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.
- ❖ முதலாம் வினாவின் 'அ' பகுதியிலுள்ள இருபது வினாக்களும் தனியாகத் தரப்பட்டுள்ளன. அவற்றுக்கான விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதி அதனை உமது ஏனைய விடைத்தாள்களின் மேல் வைத்து இணைத்துக் கொடுக்கவும்.

## பகுதி - I

01) **அ) எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

➢ **மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

1.1. பின்வருவனவற்றுள் ஈரிதழ் ஒலி
(1) க் (2) ம் (3) வ் (4) ந் (5) ன் (.......)

1.2. பின்வருவனவற்றுள் 'உ'கரம் இதழ் குவித்து உச்சரிக்கப்படும் சொல்
(1) சங்கு (2) அன்பு (3) ஐந்து (4) கதவு (5) மூன்று (.......)

1.3. பின்வருவனவற்றுள் உயிர்த்தொடர்க் குற்றியலுகரமாக அமையாதது
(1) யாது (2) தெரியாது (3) புரியாது
(4) முடியாது (5) விடியாது (.......)

1.4. பின்வருவனவற்றுள் மூன்று மெய்கள் மயங்கி வரும் சொல்
(1) வியப்பு (2) தயக்கம் (3) வாழ்த்து
(4) துப்பாக்கி (5) அண்ணல் (.......)

1.5. பின்வருவனவற்றுள் அகப்புணர்ச்சி இடம்பெற்ற சொல்
(1) நீரோடை (2) உழவுத்தொழில் (3) படிக்கின்றாள்
(4) அறிஞரவை (5) ஆடுகளம் (.......)

1.6. பின்வருவனவற்றுள் உடம்படுமெய் தோன்றிப் புணர்ந்த சொல்
(1) அரிவை (2) அறிவை (3) நோயை (4) மாயை (5) தீயை (.......)

1.7. பின்வருவனவற்றுள் சாரியை பெற்றுப் புணர்ந்த சொல்
(1) மாம்பழம் (2) வாழைப்பழம் (3) மாதுளம்பழம்
(4) பலாப்பழம் (5) அன்னாசிப்பழம் (.......)

1.8. பின்வருவனவற்றுள் 'ஆல்' உருபு நீங்கற் பொருளில் வரும் தொடர்
(1) காலத்தினால் செய்த நன்றி (2) நோயினால் வாடினாள்
(3) தீயினால் சுட்டபுண் (4) மரத்தால் விழுந்தான்
(5) கவலையால் மெலிந்தான் (.......)

1.9. பின்வருவனவற்றுள் காரண இடுகுறிப் பெயராக அமைவது
(1) பறவை (2) முள்ளி (3) ஆலயம்
(4) வளையல் (5) மரங்கொத்தி (.......)

1.10. பின்வருவனவற்றுள் விளிவேற்றுமை ஏற்காத சொல்
(1) அம்மா (2) மாணவன் (3) மனம் (4) நான் (5) அண்ணா (.......)

1.11. இளநீர் வெட்டினாள் என்பது
(1) கருவியாகு பெயர் (2) கருத்தாவாகுபெயர்
(3) தானியாகு பெயர் (4) சொல்லாகு பெயர்
(5) காரியவாகு பெயர் (.......)

1.12. பின்வருவனவற்றுள் 'வை' துணைவினையாக வந்த சொல்
(1) பணத்தை வைத்தேன்.
(2) எடுத்து வைத்தார்.
(3) பார்த்து வைத்திருக்கின்றார்.
(4) வைத்திருக்கின்றேன்.
(5) பார்த்து வைத்து நடக்க வேண்டும். (.......)

1.13. புதிய கல்விச் சீர்திருத்தம் தொடர்பான வெள்ளையறிக்கை விரைவில் வெளிவர உள்ளது. இங்கு வெள்ளையறிக்கை என்பது
(1) பண்புத்தொகை (2) உவமைத்தொகை (3) ஆக்கப்பெயர்
(4) கூட்டுப்பெயர் (5) வேற்றுமைத்தொகை (.......)

1.14. யானோ அரசன், யானே கள்வன் என்பதில் 'ஓ' கார இடைச்சொல் தரும் பொருள்
(1) தேற்றம் (2) தெரிநிலை (3) ஐயம் (4) வினா (5) மிகை (.......)

1.15. பின்வருவனவற்றுள் கூட்டுவாக்கியம்
(1) நான் நேற்று அப்பாவுடன் ஊருக்குப் போனேன்.
(2) நானும் அப்பாவும் நேற்று ஊருக்குப் போயிருந்தோம்.
(3) நான் நேற்று அப்பாவுடன் ஊருக்குப் போயிருக்கலாம்.
(4) நான் அப்பாவுடன் நேற்று ஊருக்குப் போகவில்லை.
(5) நான் அப்பாவுடன் நேற்று ஊருக்குப் போனேன். (.......)

1.16. பின்வருவனவற்றுள் செயப்படுபொருள் குன்றா வாக்கியம்
(1) நான் ஊருக்குச் சென்றேன்.
(2) நான் நண்பனுக்குக் கடிதம் எழுதினேன்.
(3) தினமும் பாடசாலைக்கு நடந்து செல்வேன்.
(4) அப்பா அடுத்த மாதம் ஊருக்கு வருகிறார்.
(5) இன்று ஊரிலிருந்து திரும்புகிறேன். (.......)

1.17. விகுதியால் காலம் உணர்த்தும் வினைச் சொல்
(1) நடந்தான் (2) செய்த (3) ஓடுவாய்
(4) ஓடுகின்றது (5) செய்யும் (.......)

1.18. வைதற் பொருளில் அமைந்த வியங்கோள் வினை
(1) கெடுக என் ஆயுள் (2) வாழ்க வையகம்
(3) நின்புகழ் ஓங்குக (4) இன்பம் மலர்க
(5) வையகம் துயர் தீர்க (.......)

1.19. சிறிய, வண்ண, பெரிய என்பன
(1) பெயரெச்சம் (2) வினையெச்சம் (3) வினையடை
(4) பெயரடை (5) அளவுப்பெயர் (.......)

1.20. துன்ப நினைவுகளிலிருந்து என்னால் விடுபட முடியவில்லை என்பதில் இடம்பெற்ற வேற்றுமைப் பொருள்கள் முறையே
(1) நீங்கல், கருவி (2) இடம், கருவி (3) நீங்கல், கருத்தா
(4) இடம், காரணம் (5) எல்லை காரணம் (.......)

**ஆ) பின்வரும் ஐந்து வினாக்களுக்கும் சுருக்கமான விடை தருக.**

1) பண்புத் தொகையை உதாரணந் தந்து விளக்குக.
2) அகப்புணர்ச்சி என்றால் என்ன? உதாரணந் தந்து விளக்குக.
3) ஐகாரக் குறுக்கம் என்றால் என்ன?
4) செயப்பாட்டு வினை என்றால் என்ன?
5) காரணவினை என்றால் என்ன? உதாரணம் தருக. *(10 புள்ளிகள்)*

02) **அ) பின்வரும் உரைப்பகுதியை 50 சொற்களில் சுருக்கி எழுதுக.**

சூழல் பாதுகாக்கப்பட வேண்டும் என்னும் விடயம் படித்தவர் தொடங்கி பாமரர் வரை எல்லோருக்கும் தெரிந்திருந்தும் தமது சூழலைப் பாதுகாக்க மனிதர்கள் எடுக்கும் நடவடிக்கைகள் மிகக் குறைவாகவே இருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால் பாதுகாக்கும் வீதத்தினை விட மாசடையும் வீதமே அதிகமாகக் காணப்படுகின்றது. சூழல் மாசடைதல் பற்றி அக்கறையின்றி இருப்பதற்குக் காரணம் யாதெனில் அதனால் வரும் விளைவுகள் சில வருடங்களுக்கு அப்பால் நிகழப் போகின்றவை என்பதும் அவை மிக மெதுவாக படிப்படியாகவே நிகழ்பவையாக இருப்பதுமாகும். பல வருடங்களுக்கப்பால் நிகழப்போகின்ற எந்தப் பிரச்சினையையும் விட மனிதர்களுக்கு அவர்களின் அன்றாடப் பிரச்சினைகளே மிக முக்கியமாகத் தென்பட்டன. வறியோர்களுக்கு அவர்கள் அன்றாடம் உயிர் வாழ்வதே பிரச்சினையானது. அதில் சூழலை பற்றிக் கவலைப்படுவது எங்கே? வசதி படைத்தவர்களுக்கோ நாளுக்கு நாள் தமது வசதிகளையும் அந்தஸ்தினையும் இன்னுமின்னும் உயர்த்துவதே பிரச்சினையாகும். அதைவிட்டு சூழலைப் பற்றிக் கவனித்துக் கொண்டிருந்தால் தாம் விரும்பியது போல கோடீஸ்வரராக மாறுவதற்கு வாய்ப்பில்லாமல் போய்விடும். கொள்கை வகுப்போர்களுக்கும் அரசியல் வாதிகளுக்கும் இவ்விரண்டு வர்க்கத்தினரையும் ஓரளவு திருப்திப்படுத்துவதும் அதே நேரம் தமது சட்டைப் பைகளை ஊழல் வழிகளினால் வரும் வருமானத்தினால் நிரப்பிக் கொள்வதும் பிரச்சினைகளாயின. வெவ்வேறு மக்கள் குழுமங்களின் தேவைகளும் பிரச்சினைகளும் அரச கொள்கை களிலேயே பிரசன்னமாகின்றன. அரசியல் வாதிகள் சகல மக்களின் வாக்குகளையும் பெற வேண்டியவர்களாகையினால் எல்லோரையும் திருப்திப்படுத்தும் கையில் செயற்படுவார். அதன் விளைவே அரச கொள்கைத் திட்டங்களாகும். பொதுவாக எது நடந்தாலும் தாம் அனுபவிக்கும் வசதிகளைக் குறைப்பதற்கு மக்களோ, அரசியல் வாதிகளோ விரும்புவதில்லை. *(10 புள்ளிகள்)*

**ஆ) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

கீழைத்தேச நாடுகள் குடியேற்ற நாட்டு ஆட்சிமுறையில் இருந்து விடுபட்ட பின்பும் தேசிய முதலாளித்துவப் பாதையில் அல்லது மக்களாட்சி என்ற பெயரில் குடும்ப ஆட்சி, குழச் சர்வாதிகாரம் என்ற நிலைக்குத் தள்ளப்படுகிறது. இந்நிலையிலும் கல்வியினால், கல்வியறிவினால் விடுதலை பெற்ற சமூகம் ஒன்றை, மனித நேய சமூகம் ஒன்றைத் தோற்றுவிப்பதால் வாழ்க்கை முறையைச் செம்மை செய்ய முடியும். ஆன்மீக வழியில் உலக சமூகத்தை ஒன்றுபட வைக்க முடியும். மனித விடுதலை என்பது ஆன்மீக விடுதலையே. மெஞ்ஞான உலகம் ஒன்றே குறிக்கோள் என்ற இந்திய ஞானநோக்கில் தளர்வு ஏற்படவில்லை. மெய்யியல் வாதத்தால் மேற்குலகம் பல்வேறு வாதப் பிரதிவாதங்களில் ஆழ்ந்து கிடக்கும் போது கல்வியின் தூரநோக்கு வாழ்வாங்கு வாழும்நிலை என்பதே உண்மைக் கல்வி என்ற சிந்தனையில் மாறுபடாது மெஞ்ஞான விருப்பை வலியுறுத்தி நிற்கும் நிலை கல்வியியலாளர்களால் நோக்கத்தக்கது.

1) இவ்வுரைப் பகுதியின் மையக்கருத்தை 15 சொற்களில் எழுதுக.

2) வாழ்க்கை முறையை எதனால் செம்மை செய்யமுடியும்?

3) இந்திய ஞானநோக்கு எனக் குறிப்பிடப்படுபவை யாவை?

4) கீழைத்தேய நாடுகளின் ஆட்சி முறைமை எவ்வாறு காணப்பட்டது?

5) இவ்வுரைப் பகுதியில் கூறப்பட்டவற்றுக்குப் பொருத்தமற்ற கூற்றாக அமைவது எது?

i) கல்வியின் தூரநோக்கு வாழ்வாங்கு வாழ்தல் என்பதாகும்.

ii) மக்களாட்சி என்ற பெயரில் நல்லாட்சி இடம்பெறுகின்றது.

iii) கல்வியினால் ஆன்மீக வழியில் உலக சமூகத்தை ஒன்றுபட வைக்க முடியும்.'

(10 புள்ளிகள்)

**03)** பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து 300 - 350 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.

1) அதீத விஞ்ஞான வளர்ச்சியும் அதன் தாக்கங்களும்

2) சமூக சமத்துவமும் தேசிய ஒருமைப்பாடும்

3) உலகத் தமிழ் ஆய்வுகளும் தனிநாயகம் அடிகளாரும்

4) இலக்கியக் கல்வியும் மனித மேம்பாடும்

5) பணியுமாம் என்றும் பெருமை

(25 புள்ளிகள்)

## பகுதி - II

### பிரிவு 'அ'

**04)** அ) சங்கமருவிய காலத்தில் தோன்றிய இலக்கியங்களை வகைப்படுத்துக.

ஆ) இக்காலத்தில் தோன்றிய பக்தியிலக்கியங்களின் பண்புகளை விளக்குக.

இ) தமிழிலக்கிய வரலாற்றில் காரைக்காலம்மையாரின் பங்களிப்பினை மதிப்பிடுக.

(15 புள்ளிகள்)

**05)** அ) விஜயநகர நாயக்கர் காலத்தில் எழுந்த பொதுமக்கள்சார் இலக்கியங்கள் எவை?

ஆ) அவற்றின் பண்புகளை ஆராய்க.

இ) 'விஜயநகர நாயக்கர் காலம் ஒரு பிரபந்தகாலம்' என்பதற்கான ஆதாரங்களை முன்வைக்குக.

(15 புள்ளிகள்)

**06)** அ) ஐரோப்பியர் காலத்தில் தமிழுக்கு அறிமுகமான ஆக்க இலக்கிய வடிவங்கள் பற்றிச் சுருக்கமாக விளக்குக.

ஆ) ஐரோப்பியர் காலத்தில் தமிழ் உரைநடை கண்ட மாற்றங்களைத் தொகுத்துத் தருக.

இ) ஐரோப்பியர் கால உரைநடை வளர்ச்சியில் வீரமாமுனிவர் கால உரைநடை வளர்ச்சியில் பெறும் இடத்தினை மதிப்பிடுக.

(15 புள்ளிகள்)

### பிரிவு 'ஆ'

**07)** அ) ஒல்லாந்தர் காலத்தில் எழுந்த இலக்கியங்களை வகைப்படுத்துக.

ஆ) இக்காலத்தில் கத்தோலிக்க மதக் கருத்துக்களைப் பரப்புவதற்குத் தமிழ் இலக்கிய வடிவங்கள் கையாளப்பட்டன. ஆராய்க.

(15 புள்ளிகள்)

**08)** ஈழத்தில் எழுந்த புராணங்களைக் குறிப்பிட்டு விளக்குக.

(15 புள்ளிகள்)